**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.92/2022**
Prosecution: **PW7**

Deposition of the witness of **LW10**

| Name | திரு.மஞ்சுளா | District | இராணிப்பேட்டை |
|---|---|---|---|
| Husband Name | திரு.நாகேந்திரன் | Occupation | தனியார் நிறுவனத்தில் வேலை |
| Village /Area | சர்வந்தாங்கல் | Age | 27 |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 8246 8550 2940 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **05.03.2026.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் ஆற்காடு தாலுக்காவிலுள்ள சர்வந்தாங்கல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது சிப்காட்டிலுள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன நாகேந்திரன் என் கணவர் ஆவார். அ.சா.6 அசோகன் என் கணவரின் சகோதரர். அ.சா.1 ரகுவரன் என் ஊரை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளில் 3-ம் எதிரி கிரிவாசன் என்பவர் என் ஊரை சேர்ந்தவர். மற்ற இரண்டு எதிரிகளையும் எனக்கு தெரியாது. என் கணவர் நாகேந்திரன் தனியார் பேருந்தில் நடத்துனராக வேலை செய்து வந்தார். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். 27.07.2021-ம் தேதி எங்கள் ஊரில் கூழ் ஊற்றும் திருவிழா நடந்தது. அன்று இரவு 9.00 மணி அளவில் நான் என் வீட்டில் இருந்த போது என் ஊரை சேர்ந்த சந்தோஷ் என்ற சிறுவன் என் வீட்டிற்கு வந்து என் கணவர் ரத்தக்காயத்துடன் சாலையில் கிடப்பதாக கூறினான். உடனே நான் அந்த இடத்திற்கு செல்வதற்கு முன்பே என் கணவரை என் ஊர்காரர்கள் இராணிப்பேட்டை எஸ்.எம்.எச் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டனர். பின்னர் நானும், என் சித்தி புவனேஷ்வரி மற்றும் என் சித்தப்பா வடிவேல் ஆகிய மூவரும் எஸ்.எம்.எச் மருத்துவமனைக்கு சென்றோம். அங்கிருந்த மருத்துவரிடம் நாங்கள் விசாரித்த போது என் கணவரை மருத்துவமனைக்கு கொண்டு வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார். நான் விசாரித்த போது என் கணவரை எங்கள் ஊரிலுள்ள பேருந்து நிழற்குடை அருகில் யாரோ பாட்டிலால் குத்திவிட்டதாக சொன்னார்கள். என்

கணவரை குத்தி காயப்படுத்தி கொலை செய்த நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. சம்பவம் பற்றி கேள்விப்பட்டேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அவரை பகுதியாக பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு, சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

என் கணவர் இறந்த பிறகு நான் வடகால் கிராமத்தில் உள்ள என் அம்மா வீட்டிற்கு சென்று அங்கு வசித்து வருகிறேன். சம்பவத்திற்கு பிறகு என் கணவரை கொலை செய்த நபர்கள் யார் என்று கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை 29.07.2021 விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றாலும், அந்த விசாரணையில் எங்கள் ஊரில் 27.07.2021-ம் தேதி ஆடி மாதம் கூழ் ஊற்றும் திருவிழா நடைபெற்றதாகவும், அப்போது கிரிவாசனுடன் 4 நபர்கள் சாமி ஊர்வலத்தில் நடனம் ஆடியதாகவும், ரகுவரனும், என் கணவர் நாகேந்திரனும் கிரிவாசனை அழைத்து வெளியூர்காரர்கள் நடனம் ஆடக் கூடாது என் சொல்லியும் கேட்காமல் அவர்கள் நடனமாடியதாகவும், கிரிவாசன் என் கணவரையும், ரகுவரனையும் பார்த்து நீங்கள் என்னடா சொல்வது போங்கடா என்று சொன்னதாகவும், அங்கிருந்த என் மூத்தார்களான யோகலிங்கம், அசோகன் மற்றும் ஊர்காரர்கள் கிரிவாசனிடம் வெளியூர் ஆட்கள் நடனம் ஆடக் கூடாது என கூறியதாகவும், வெளியாட்களை பற்றி விசாரிக்க அவர்கள் கிரிவாசனுடன் படித்த ஹரிஷ், ஹேமபிரசாத், அன்பரசன் ஆகியோர் ராமநாதபுரம் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றும், கார்த்தி என்பவர் கிருஷ்ணாவரம் கூட்ரோட்டை சேர்ந்தவர் என்றும், அவர்கள் திட்டிக்கொண்டே எங்கள் ஊர் பேருந்து நிறுத்தத்திடம் இரவு சுமார் 9.00 மணியளவில் சென்ற போது கிரிவாசனும், அவருடன் இருந்த அவருடைய நண்பர்களும் எங்களையாடா நடனம் ஆடக் கூடாது சொல்கிறீர்கள் என்று என் கணவரிடம் கேட்ட போது அப்போது என் கணவரும், ரகுவரனும் பேருந்து நிழற்குடைக்கு உள்ளே சென்ற போது ஹேமபிரசாத் என்பவர் அங்கிருந்த பிராந்தி பாட்டிலை உடைத்து என் கணவரின் வலதுபக்க கழுத்தில் ஓங்கி குத்திவிட்டதாகவும், கார்த்தி (எ) கேசவன் வேறு ஒரு பாட்டிலை உடைத்து ரகுவரனின் இடது கையில் குத்தி காயம் ஏற்படுத்தியதாகவும், அந்த சம்பவத்தை நான் கேள்விப்பட்டு என் வீட்டிலிருந்து நானும், எனது மாமியார், என் குடும்பத்தினர் காயம்பட்ட என் கணவரை சம்பவ இடத்திற்கு சென்று பார்த்ததாகவும் பின்னர் என் கணவர் சம்பவத்தில் ஏற்பட்ட காயம் காரணமாக இறந்துவிட்டதாகவும் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.